

அமரர். குமாரு கிருஷ்ணபிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

தோத்திரத் திரட்டு

# கிருஷ்ணபதம்

22.08.2011

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

இஃது

யாழ்ப்பாணம், வடமராட்சிப்பகுதி, மேலைப்புலோலி,

திருநாவலூரைப் பிறப்பிடமாகவும்

தம்பசெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

உயர் சைவ வேளாண்குலத் திலகரும்

அமரர்.குமாரு வள்ளிப்பிள்ளையினரின்

ஆசை மகனும்

திருமதி.கிருஷ்ணபிள்ளை மகேஸ்வரியின்

அன்புக் கணவருமாகிய

அமரர் குமாரு கிருஷ்ணபிள்ளை அவர்கள்

(ஓய்வு பெற்ற உதவிப் பிரதம தபாலதிபர்)

சிவபதப்பேறு பெற்றமை குறித்த

# நினைவு மலர்

22.08.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
புனிதத்தின் திருவுருவாய்
பூவிதழின் மென்மையதாய்
பெருமையின் புகழுருவாய்
பொறுமையின் இருப்பிடமாய்
போதத்தின் நிறைகுடமாய்
அன்பினில் அரிகவளமாய்
இல்லத்தின் ஒளிவிளக்காய்
ஈகையில் பாரியாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து – எமை
நானிலம் போற்ற ஏற்றமுற வைத்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட – எம்
அன்புத் தந்தையின் திருப்பாதங்களில் – இம்
மலரினைச் சமர்ப்பணம் செய்து
பிரார்த்திக்கின்றோம்.

-குடும்பத்தினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| சமர்ப்பணம் | 01 |
| தோத்திரப்பாக்கள், காயத்ரி மந்திரம், திருமந்திரம், | 03 |
| மஹாமிருக்யுஞ்ஜய மந்திரம், வைரவர் புராணம், காரியசித்திமந்திரம் | 05 |
| வாழ்க்கை வரலாறு | 06 |
| ஆத்திசூடி | 08 |
| கொன்றைவேந்தன் | 09 |
| நல்வழி | 12 |
| உலகநீதி | 18 |
| வாக்குண்டாம் (மூதுரை) | 21 |
| நன்னெறி | 25 |
| கந்த சஷ்டிக்கவசம் | 30 |
| கௌரிக்காப்பு | 37 |
| சகல கலாவல்லி மாலை (ஸ்ரீ குமர குருபரர் அடிகள்) | 39 |
| திருவெம்பாவை | 42 |
| திருப்பள்ளியெழுச்சி | 47 |
| விநாயகர் அகவல் (ஔவையார்) | 50 |
| சிவபுராணம் | 53 |
| திருவங்கமாலை (நாவுக்கரசர்) | 56 |
| பட்டினத்துப் பிள்ளையார் பாடல்கள் | 58 |
| நவக்கிரக வழிபாடு | 60 |
| சுபக்கிரியைப் பொருட்கள் | 62 |
| திருப்பொற்சுண்ணம் | 63 |
| நன்றி நவிலல் | 68 |
| வம்சாவழி | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# குமாரு கிருஷ்ணபிள்ளை

அவர்கள்



தோற்றம்
04 * 09 * 1933

மறைவு
23 * 07 * 2011

## திதி நிர்ணயம்

ஆண்டு கரவருடத் தாடித் திங்கள் ஏபரபக்கமதில்
ஈண்டு இருபத்துமூன்றில் சனிசேர் அட்டமியில்
கிருஷ்ணபிள்ளை மிகுசீர் சூழச் சங்க பதும நிதி
பூண்டு பார்மீது பரனது வீடுற்றார் விரும்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைமல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## காயத்ரி மந்திரம்

ஓம்பூர் புவஸ்வாஹா !
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தீ யோயோன ப்ரசோதயாத்

## திருமந்திரம்

இக்காய நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற்போம் வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்
றக்கால முன்ன அருள் பெறலாமே.

## மஹா மிருத்யுஞ்ஜய மந்திரம்

(இது வியாதிகளை நீக்கும் மந்திரம் மரணத்தை வெல்லும் மந்திரம்)

ஓம் த்ரயம்பகம் யஜா மஹே
சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முசுக்ஷீய மாம்ருதாத்.

## வைரவர் புராணம்

பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்தவானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## காரியசித்தி மந்திரம்

வக்ரதுண்ட மஹா காய
சூரிய கோடி சமப்ரப
நிர்விக்னம் குருமே தேவ
ஸர்வகார்யேஷு ஸர்வதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணிய புனிதராம் கருணைமிகு கடவுளாம் அமரர் குமாரு கிருஷ்ணபிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு

பொன் கொழிக்கும் புனித பூமியாம், ஈழத்திருநாட்டில் யாழொலி இனிது ஒலித்த யாழ்ப்பாண நன்நகரிலே கல்வியே கண்ணெனத் திகழ்ந்த வடமராட்சியின் கண்ணே புலவரொலிப் புகழ்பூத்து விளங்கும் புலோலியின் மேற்குப் பகுதியில் பருத்திநகரின் மருங்கே நீர்வளமும் நிலவளமும் நிறைந்து ஒருங்கே அமையப்பெற்ற திருநாவலூரில் உயர்சைவ வேளாளர் குலத்தில் வந்துதித்த முத்துக்களாம் வேலப்பர் - குமாரு + வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வராக 4.9.1933ல் குமாரு கிருஷ்ணபிள்ளையவர்கள் அவதரித்தார். இவர் தனது சகோதரி இரத்தினத்துடனும் பெற்றோருடனும் இளமைக் காலத்தில் இனிதே வாழ்ந்து வந்தார்.

அன்னார் தனது ஆரம்பக்கல்வியை சிறப்புடன் மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் கற்றுத் தேர்ந்தார். உயர்கல்விப் படிப்பினை (B.S.C) இந்தியா பச்சியப்பன் பல்கலைக் கழகத்தில் கற்றார். 1958ல் தபால் திணைக்களத்தில் தபாலதிபராகப் பதவியேற்றார். மாத்தளை, கொழும்பு (ம.த.அ), பருத்தித்துறை , பரந்தன், கிளிநொச்சி , திருகோணமலை, பொலனறுவை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் தபாற்திணைக்களத்தில் சேவையாற்றினார். கடைசியில் உதவிப்பிரதம தபாலதிபர் பதவியும் வகித்தார்.

1961 ஆண்டு திருவாளர் கணபதிப்பிள்ளை + இராசம்மா தம்பதிகளின் மூத்த மகளாம் மகேஸ்வரியைத் திருமணம் செய்தார். இவருக்கு சிவசக்தி, சூரியகுமார், வசந்தி, செல்வகுமார் எனும் செல்வக் குழந்தைகள் நால்வர் பிறந்தனர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து உயர் கல்வியினைக் கற்று அறிவு மிக்கவர்களாக விளங்கினர்.

மகன் சூரியகுமார் பல்கலைக்கழகம் பேராதனையில் பட்டம் பெற்று யாழ்பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளராகிக் கடமையாற்றி தற்போது, கலாநிதி பட்டப்படிப்பை (P.H.D) அமெரிக்காவில் பயில்கின்றார். மகள் வசந்தி யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப்பட்டம் பெற்று வட இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். இளையமகன் செல்வகுமார் பொறியியலாளராக (பேராதனை ப.க.க.)ப் பட்டம் பெற்று நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபை - யாழ்ப்பாணத்தில் பொறியியலாளராக உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989ல் மூத்தமகள் சிவசக்திக்கு சிவஞானசெல்வம் எனும் வங்கியாளரைத் திருமணம் செய்வித்து பேரப்பிள்ளைகளான அனோஜன், யோகினி, தினேஸ், பவுணா, மாதுமை, சிவானி ஆகியோரைத் தூக்கி அணைத்து மகிழ்ந்தார்.

1999 ஆண்டில் இளையமகள் வசந்திக்கு ஜெயராசா எனும பல்வைத்திய நிபுணரைத் திருமணம் செய்வித்து ஜெனோசன், சர்மினி எனும் பேரப்பிள்ளைகளைக் கண்டு அவர்களின் அன்பையும்பெற்று வாழ்ந்து வரலானார்.

மூத்தமகன் சூரியகுமாருக்கும் நந்தினிதேவி (திட்டமிடல் அதிகாரி (RDHS) எனும் இல்லாளைத் திருமணம் செய்வித்து மகிழ்ந்தார்.

அதன் பின்பு இளையமகன் செல்வகுமார் சுமதி (விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை) திருமணத்தை நிகழ்த்தி மகிழ்ந்தார். இவர்களின் செந்தாளன் எனும் பேரப்பிள்ளையையும் கண்டு ஆனந்தம் கொண்டார்.

இவ்வண்ணம் நால்வர் பிள்ளைகளினதும் சுக துக்கங்களிலும், நன்மைகளிலும், நலன்களிலும் பங்கு கொண்டு கல்வி சமயப் பண்பாடு கலாச்சார விழுமியங்களிலும் இணைந்து கொண்டார்.

தம்பசிட்டி காட்டுப்பாதி முருகன் கோவிலின் தர்மகர்த்தா சபைச் செயலாளராக விளங்கியுள்ளார். கூவில் ஒல்லையம்பதி வீரபத்திரார் ஆலய தர்மகர்த்தாசபை உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார்.

தனது சகோதரியின் மருமக்களான சிவராசா, சிறீஸ்கந்தராசா, சிவதர்சினி ஆகியோரின் திருமண நிகழ்விலும் கலந்து ஆனந்த மடைந்தார்.

எண்ணற்ற இனிமைகளையெல்லாம் கண்டுகளித்த பண்பாளன், பொறுமையான அறிவான நல்லார் வள்ளுவம் வழிவாழ்ந்த செம்மல் ஓர்நாள் இடர்ப்பட்டார். திடீரென நடை தளர்ந்தது பொல்லாக்காலம் சூழ்ந்தது காலநியதியின் கடமை அழைத்தது. தான் பெற்ற பிள்ளைகளை, பெறாமக்களை, உற்றாரை, உறவினரை, நண்பரை, அயலவரை அனைவரையும் 23.07.2011 அன்று துக்கத்தில் ஆழ்த்திவிட்டு பூதவுடலை நீத்துப் புகழிடம் சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். (திருக்குறள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

**காப்பு**

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே.

அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண்ணெழுத் திகழேல்
ஏற்பதிகழ்ச்சி
ஐயமிட்டுண்
ஒப்புரவொழுகு
ஓதுவதொழியேல்
ஒளவியம் பேசேல்
அஃகஞ் சுருக்கேல்
கண்டொன்று சொல்லேல்
ஙப்போல் வளை
சனி நீராடு
ஞயமபடவுரை
இடம்பட வீடெடேல்
இணக்கமறிந் திணங்கு
தந்தைதாய் பேண்
நன்றி மறவேல்
பருவத்தே பயிர்செய்
மன்றுபறித் துண்ணேல்
இயல்பலாதன செயேல்
அரவமாட்டேல்
இலவம் பஞ்சிற்றுயில்
வஞ்சகம் பேசேல்
அழகலாதன செயேல்
இளமையிற் கல்
அறனை மறவேல்
அனந்த லாடேல்
கடிவது மற
காப்பது விரதம்
கிழமைப் படவாழ்
கீழ்மையகற்று
குணமது கைவிடேல்
கூடிப் பிரியேல்
கெடுப்பதொழி
கேள்வி முயல்
கைவினை கரவேல்
கொள்ளை விரும்பேல்
கோதாட்டொழி
கௌவை யகற்று
சக்கர நெறிநில்
சான்றோர் இனத்திரு
சித்திரம் பேசேல்
சீர்மை மறவேல்
சுளிக்கச் சொல்லேல்
சூது விரும்பேல்
செய்வன திருந்தச் செய்
சேரிடமறிந்து சேர்
சையெனத் திரியேல்
சொற்சோர்வு படேல்
சோம்பித் திரியேல்
தக்கோ னெனத்திரி
தானமது விரும்பு
திருமாலுக் கடிமைசெய்
தீவினை யகற்று
துன்பத்திற் கிடங்கொடேல்
தூக்கி வினைசெய்
தெய்வ மிகழேல்
தேசத்தோடொத்து வாழ்
தையல்சொற் கேளேல்
தொன்மை மறவேல்
தோற்பன தொடரேல்
நன்மை கடைப்பிடி
நாடொப்பன செய்
நிலையிற் பிரியேல்
நீர் விளையாடேல்
நுண்மை நுகரேல்
நூல்பல கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்பயிர் விளை
நேர்பட ஒழுகு
நைவினை நணுகேல்
நொய்ய உரையேல்
நோய்க்கிடங் கொடேல்
பழிப்பன பகரேல்
பாம்பொடு பழகேல்
பிழைபடச் சொல்லேல்
பீடு பெறநில்
புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
பூமி திருத்தியுண்
பெரியோரைத் துணைக்கொள்
பேதமை அகற்று
பையலோ டிணங்கேல்
பொருள்தனைப் போற்றிவாழ்
போர்த்தொழில் புரியேல்
மனந் தடுமாறேல்
மாற்றானுக் கிடங்கொடேல்
மிகைபடச் சொல்லேல்
மீதூண் விரும்பேல்
முனைமுகத்து நில்லேல்
மூர்க்கரோ டிணங்கேல்
மெல்லினில்லாள் தோள்சேர்
மேன்மக்கள் சொற்கேள்
மொழிவ தறமொழி
மோகத்தை முனி
வல்லமை பேசேல்
வாதுமுற் கூறேல்
வித்தை விரும்பு
வீடுபெற நில்
உத்தமனாயிரு
ஊருடன் கூடிவாழ்
வெட்டெனப் பேசேல்
வேண்டி வினைசெயேல்
வைகறைத் துயிலெழு
ஒன்னாரைத் தேறல்
ஓரம் சொல்லேல்

# கொன்றை வேந்தன்

**காப்பு**

கொன்றை வேந்தன் செல்வ னடியினை
என்று மேத்தித் தொழுவோம் யாமே.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லற மல்லது நல்லற மன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினும் செய்வன செய்
ஒருவனைப் பற்றி யோரகத்திரு
ஓதலினன்றே வேதியர்க் கொழுக்கம்
ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃ கமுங் காசுஞ் சிக்கெனத் தேடு
கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை
காவல் தானே பாவையர்க் கழகு
கிட்டாதாயின் வெட்டென மற
கீழோர் ஆயினுந் தாழ வுரை
குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை
கூரம்பாயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்
கேட்டில் உறுதி கூட்டுமுடைமை
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு
கௌவை சொல்லி னெவ்வருக்கும் பகை
சான்றோ ரென்கை ஈன்றோர்க் கழகு
சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு
சீரைத் தேடி னேரைத் தேடு
சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவ மறந்தால் கைதவ மாளும்
சேமம் புகினும் யாமத் துறங்கு
சையொத் திருந்தா லைய மிட்டுண்
சொக்க ரென்பவ தேம்பித் திரிவர்
தந்தை சொன்மிக்க மந்திரமில்லை
தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை
திரைகட லோடியுந் திரவியந் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்
தெய்வம் சீறிற் கைதவ மாளும்
தேடா தழிக்கிற் பாடா முடியும்
தையும் மாசியும் வையகத் துறங்கு
தொழுதூண் சுவையி னுழுதூ ணினது
தோழ னோடு மேழைமை பேசேல்
நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
நீரகம் பொருந்திய வூரகத் திரு
நுண்ணிய கருமம் மெண்ணித் துணி
நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை
நேரா நோன்பு சீராகாது
நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்
நொய்யவ ரென்பவர் மெய்ய வராவர்
நோன்பென் பதுவே கொன்றுதின் னாமை
பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்
பாலோ டாயினுங் கால மறிந்துண்
பிறன்மனை புகாமை யறமெனத் தகும்
பீரம் பேணிற் பாரம் தாங்கும்
புலையுங் கொலையுங் களவுந் தவிர்
பூரியர்க் கில்லை சுற்றமுஞ் சினமும்
பையச் சென்றால் வையந் தாங்கும்
பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்
போன மென்பது தானுழந் துண்டல்
மருந்தே யாயினும் விருந்தோ டுண்
மாரி யல்லது காரிய மில்லை
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
மீகாமன் இல்லா மரக்கல மோடாது
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்
மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு
மேழிச் செல்வங் கோழை படாது
மொழிவது மறுக்கி னழிவது கருமம்
மோன மென்பது ஞான வரம்பு
வளவ னாயினும் அளவறிந் தழித்துண்
வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும்
விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம்
வீரன் கேண்மை கூரம் பாகும்
உரவோ ரென்கை யிரவா திருத்தல்
ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு
வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறி னாந்துணை யில்லை
வையந் தோறும் தெய்வந் தொழு
ஒத்த விடத்து நித்திரை கொள்
ஓதாதார்க் கில்லை யுணர்வோ டொழுக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி

## காப்பு

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

**தீதினை நீக்கு, நன்மையைச் செய்**

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்

**இரண்டே சாதி**

சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

**விரைந்து தருமம் செய்க**

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே
அடும்பொய்யை மெய்யென் றிராதே - இடுங்கடுக
உண்டாயி லுண்டாகு மூழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு.

**குருடன் எறிந்த மாத்திரைக் கோல்**

எண்ணி யொருகருமம் யார்க்குஞ் செய்யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லாற் - கண்ணில்லான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
ஆங்கால மாகு மவர்க்கு.

**கிடைப்பனவே கிடைக்கும் கவலை வேண்டாம்**

வருந்தி யழைத்தாலும் வாராது வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா- இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்

**பிறர்தர வருவதன்று**

உள்ள தொழிய ஒருவர்க்(கு) ஒருவர் சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில் - வெள்ளக்
கடலோடி மீண்டு கரையெறி னாலென்
உடலோடு வாழும் உயிர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேர்க்கையின் ஒற்றுமை**

எல்லாப் படியாலு மெண்ணினா லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பா ராதலினா லாங்கமல நீர்போற்
பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

**செல்வம் உருண்டோடும்**

ஈட்டும் பொருண் முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம் - தேட்டம்
மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம்.

**ஈகையின் பெருமை**

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்காலுலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து

**இட்டுண்டிரும்**

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

**பாழ்வயிறே உன்னுடன் வாழ்தல் அரிது**

ஒருநா ளுணவை யொழியொன்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய் - ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது.

**உழுதொழிலே உலகின் உயர் தொழில்**

ஆற்றங்கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

**மானமிழந்தும் வாழ்வதோ?**

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை - சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விதியினை வெல்லும் மதி**

சிவாய நமவென்று சிந்தித் திருப்போருக்
கபாய மொருநாளு மில்லை - உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

**நாற்பெரும் அற்புதங்கள்**

தண்ணீர் நிலத்தாற் றக்கோர் குணங்கொடையாற்
கண்ணீர் மாறாக் கருணையாற் - பெண்ணீர்மை
கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி.

**தெய்வத்தை நொந்து பயன் என்ன?**

செய்தீர் வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ விருநிதியம் - வையத்
தறும்பாவ மென்னறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்.

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகின்
உற்றா ருகந்தா ரெனவேண்டா - மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவ ரிடாதே
சரணங் கொடுத்தாலுந் தாம்

**திரைகடலோடியுந் திரவியந் தேடு**

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்து:ம - போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்.

**இவையெல்லாம் வீண்**

நீறில்லாத நெற்றி பாழ் நெய்யில்லா உண்டி பாழ்
ஆறில்லா ஊருக் கழகுபாழ் - மாறில்
உடன் பிறப் பில்லா உடம்பு பாழ் பாழே
மடக்கொடி இல்லா மனை

அம்மி துணையாக வாறிழிந்த வாறொக்கும்
கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம் - இம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வஞ்சமிலார் வாழ்வார்**
நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையாள் தான்.

**பாவி புதைத்த பணம்**
பாடுபட்டுத் தேடிப்பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யநுவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.

**பட்சபாதம் விளைவிக்கும் கேடு**
வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை.

**மனையின் சிறப்பு**
நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ் - மாறில்
உடன்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை.

**பசிக்கு முன் யாவும் பறக்கும்**
மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லிற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

**வரவுக்கேற்ப செலவு செய்க**
ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்குங் கள்வனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கு பொல்லானாம் நாடு.

**வினை (தொழில்) மிக வலிது**
தாந்தம்முன் செய்வினை தாமே அனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே - வேந்தே
ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்றாய்
வெறுத்தாலும் போமோ விதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எல்லாம் ஈசன் செயல்**

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்.

**அளவற்ற எண்ணம் அழிவைத்தரும்**

உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன - கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்.

**இழுக்குவரின் குறைவுபடும்**

இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சாலும்
ஒழுக்க முயர்குலத்தி னன்று - வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி.

**அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்**

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்து
வேருக்கு நெக்கு விடும்.

**உள்ள மேன்மையே உயர்ந்த செல்வம்**

ஆறிடு மேடும் மடுவும் போலாம் செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீமை வீறும் உயர்ந்து.

**இல்லானை எவர் விரும்புவார்?**

கல்லானே யானும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங்கு எதிர்கொள்வர் - இல்லானை இல்லாளும் வேண்டாள்
ஈன்றெடுத்ததாய் வேண்டாள்
சொல்லாதவன் வாயிற் சொல்

**விளைவின் அழிவு**

நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்திற்
கொண்ட கருவழிக்குங் கொள்கைபோல் - ஒண்டொடீ
போதந் தனங்கல்வி பொன்றவருங் காலமயன்
மாதர்மேல் வைப்பார் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விதி என்ன செய்யும்**
வினைப்பயனை செல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை - நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலையுறல் நெஞ்சமே
விண்ணுறுவார்க்கு இல்லை விதி.

**சமநிலைத் தத்துவம்**
நன்றென்றுந் தீதென்றும் நானென்றுந் தானென்றும்
அன்றென்றும் ஆமென்றும் ஆகாது நின்றநிலை
தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவர் தேடும் பொருள்.

**முக்கலையின் முதன்மை**
முப்பதா மாண்டளவில் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறானாயிற் - செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமா மூப்பு.

**ஒரு வாசகம் பற்றிய பெருவாசகம்**
தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென் றுணர்.

**விதி வலிது**
ஆவாரை யாரே அழிப்பார் அதுவன்றி
சாவாரை யாரோ தவிப்பார் - ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யாம் புவியதன் மேல்.

**கரவாது அளித்திடுக**
மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பர் யாவருமங் கில்லை - சுரந்தமுதம்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத்தவர்.

**குறிப்பிற் பொருள் உணர்வோர்**
பூவாதே காய்க்கும் மரமும் மக்களும்
ஏவாதே நின்றுணர்வார் தாம் உளரே - தூவ
விரைந்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றா துணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகநீதி

## சூத்திரம்

ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே யொருநாளும் பழக வேண்டாம்
நல்லிணக்க மில்லாரோ டிணங்கவேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்
அடுத்தவரை யொருநாளுங் கெடுக்கவேண்டாம்
மஞ்சாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்
தனந்தேடி யுண்ணாமற் புதைக்க வேண்டாம்
தருமத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்
சினந்தேடி யல்லலையுந் தேடவேண்டாம்
சினந்திருந்தார் வாசல்வழிச் சேரல் வேண்டாம்
வனந்தேடும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

குற்றமென்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்
கற்றவரை யொருநாளும் பழிக்க வேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனோ டெதிர்மாறு பேச வேண்டாம்
கோயிலில்லா ஊரிற்குடி யிருக்கவேண்டாம்
மற்றுநிக ரில்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழாமற் பெண்ணைவைத்துத் திரிய வேண்டாம்
மனையாளைக் குற்றமொன்றும் சொல்லவேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரிற் புறங்கொடுத்து மீள வேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்
தாழ்ந்தவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
வாழ்வாரும் குறவருடைய வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர்சொல் வார்த்தைகளை மறக்கவேண்டாம்
முன்கோபக் காரரோ டிணங்க வேண்டாம்
வாத்தியார் கூலியைவைத் திருக்க வேண்டாம்
வழிமறுத்துத் திரிவாரோடிணங்க வேண்டாம்
சேர்ந்தபுக ழாளனொரு வள்ளி பங்கன்
திருக்கைவே லாயுதனைச் செப்பாய் நெஞ்சே.

கருதாமற் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கழிவை யொருநாளும் பேசவேண்டாம்
பொருவார்தம் போர்க்களத்திற் போக வேண்டாம்
பொதுநிலத்தி லொருநாளும் இருக்க வேண்டாம்
இருதார மொருநாளும் தேடவேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனங்காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் போதத்தைக் கூறாய் நெஞ்சே.

சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
செய்தநன்றி யொருநாளும் மறக்க வேண்டாம்
ஊரோடும் குண்டுணியாயத் திரிய வேண்டாம்
உற்றாரை உதாசினங்கள்சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டு துணைபோய்த் திரிய வேண்டாம்
வாராருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

மண்ணின்று மணனோரஞ்சொல்ல வேண்டாம்
மனஞ்சலித்துச் சிலுக்கிட்டுத் திரிய வேண்டாம்
கண்ணழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்
காணாத வாத்தையைக் கட்டுரைக்க வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்
புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்க வேண்டாம்
மண்ணளந்தான் தங்கையுமை மைந்தன் எங்கோன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

மறம்பேசித் திரிவாரோ டிணங்க வேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்
திறம்பேசிக் கலக்கமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்
குறம்பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்
குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே.

அஞ்சுபேர் கூலியைக்கைக் கொள்ள வேண்டாம்
அதுவேதிங் கென்னின்நீ சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணான்நா விதன்றன் கூலி
சகலகலை ஓதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவிச்சி கூலி
மகாநோவு தனைதீர்த்த மருத்துவன்நன் கூலி
இன்சொல்லுடன் இவர்கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானோ எமன்றானே.

கூறாக்கி யொருகுடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேற் பூத்தேடி முடிக்க வேண்டாம்
தூறாக்கித் தலையிட்டுத் திரியவேண்டாம்
துர்ச்சனராய்த் திரிவாரோ டிணங்கவேண்டாம்
வீறான தெய்வத்தை யிகழவேண்டாம்
வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்
மாறான குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

ஆதரித்துப் பலவகையாற் பொருளுந் தேடி
அருந்தமிழால் அறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலக நாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி
காதலித்துக் கற்றோருங் கேட்ட பேருங்
கருத்துடனே நாடோறுங் களிப்பி னோடு
போதமுற்று மிக வாழ்ந்து புகழுந் தேடிப்
பூலோக முள்ளளவும் வாழ்வார் தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குண்டாம்

வாக் குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக் குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வர் தமக்கு.

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

நல்லார் ஒருவர்க்குச் செய்தஉபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்.

இன்னா இளமை வறுமைவந்து எய்தியக்கால்
இன்னா அளவில் இனியவும் - இன்னாத
நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக்கு அழகு.

அட்டாலும் பால்சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்ப அல்லர் - நண் பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவாரோ - கற்றூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான்கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு - மேலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்து அளவே ஆகும் குணம்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
நல்லார் சொல் கேட்பதும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

தீயாரைக் காண்பதுவும் தீதே, திரு அற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே: அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது.

நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழிஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டு உமிபோனால் முளையாதாம் - கொண்டபேர்
ஆற்றல் உடையர்க்கும் ஆகாது அளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

மடல்பெரிது தாழை:, மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்று இருக்கவேண்டா - கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது:, அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டுஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய
மாட்டா தவன்நன் மரம்.

கானமயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
3கல்லாதான் கற்ற கவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல் - பாங்கறியா
புல்அறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்.

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓடஉறுமீன் வரும் அளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு.

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவுஅல்லர் அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

சீரியர் கெட்டாலும் சீரியரே:, சீரியர் மற்று
அல்லாதார் கெட்டால் அங்கு என்னாகும் - சீரிய
பொன்னின் குடம் உடை ந்தால் பொன்னாகும் என்ஆகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால்?

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன்.

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு.

இல்லாள் அகத்துஇருக்க இல்லாதது ஒன்று இல்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்
புலிகிடந்த தூறாய் விடும்.

எழுதியவாறே காண்: இரங்கும் மட நெஞ்சே!
கருதியவாறு ஆமோ கருமம் - கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிளவொடு ஒப்பர் கயவர்! கடுஞ் சினத்துப்
பொற் பிளவோடு ஒப்பாரும் போல்வரே - வில் பிடித்து
நீர் கிழிய எய்த வடுப் போல மாறுமே
சீர் ஒழுகு சான்றோர் சினம்.

நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தாற் போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உவக்கும் பிணம்.

நஞ்சு உடைமைதான் அறிந்து நாம் கரந்து உறையும்
அஞ்சாப் புறங் கிடக்கும் நீர்ப் பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலர் நெஞ்சத் தவர்.

மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்பு உடையான் - மன்னர்க்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு.

கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - மெல்லிய
வாழைக்குத்தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்.

சந்தன மென் குறடு தான் தேய்ந்த காலத்தும்
கந்தம் குறை படாது ஆதலால் - தம் தம்
தனம் சிறியர் ஆயினும் தார் வேந்தர் கேட்டால்
மனம் சிறியர் ஆவரோ மாற்று.

மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல
உருவும் உயர் குலமும் எல்லாம் - திருமடந்தை
ஆம் போது அவளோடு ஆகும் அவள் பிரிந்து
போம் போது அவளோடும் போம்.

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்நெறி

"மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதம் வருமே!

1. என்று முகமன் இயம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர் - துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து.

2. மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க - ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதலால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விரும்பு.

3. தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியவாராற் றாங்கொள்க - தங்கநெடுங்
குன்றினாற் செய்தனைய கொள்கையாய் ! ஆவின்பால்
கன்றினாற் கொள்ப கறந்து

4. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம் - பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயல்முகந்து
பொய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

5. நீக்கமறும் இருவர் நீங்கிப் புனர்ந் தாலும்
நோக்கினவர் பெருமை நொய்தாகும் - பூங்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப்பழமைபோற்
புல்லினும் திண்மைநிலை போம்.

6. காதன் மனையாமுங் காதலனும் மாறின்றித்
தீதி லொருகருமம் செய்யவே - ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி எனமுகத்தாய் நோக்கறான்
கண்ணிரண்டு மொன்றையே காண்.

7. கடலே யனயம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி - விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

9. மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவில் - பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து.

10. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் - திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே னின்று.

11. பொய்ப்புலங்க ளைத்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் - துப்பிற்
பழற்றுங்கொல் கற்றூணைச் சூறா வழிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுண் ருரும்பு.

12. வருந்து முயிரொன்பான் வாயி நிலுடம்பிற்
போருந்துத றானெ புதுமை - திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுவிடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு

13. பெருக்க மொடுசுருக்கம் பெற்ற பொருட்கேற்ப
விருப்ப மொடு கொடுப்பர் மேலோர் - சுரக்கு
மலையளவு நின்றமுலை மாதே! மதியின்
கலையளவு நின்ற கதிர்.

14. தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்தல் - இலையால்
இரைக்கும்வண் டூதுமல ரீங்கோதாய்! மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு

15. இல்லானுக் கன்பின் இடம்பொரு ளேவன்மற்(று)
எல்லா மிருந்தும்அவற் கென்செய்யும் - நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. தம்மையுந் தங்கடலை மையையும் பார்த்தயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர் - தம்மின்
இழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ் செல்லாதோ கடல்

17. எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ - பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி.

18. இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே - பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல்.

19. நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவார் - வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழற்கால் வர.

20. பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவ ரென்க - தெரியிழாய் !
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

21. எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம் - எழுத்தறிவார்
ஆயுங் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை.

22. ஆக்கும் அறிவா னலது பிறப்பினான்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க - நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு.

23. பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம் - நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகால்
எறும்பூரக் கற்குழியு மே.

24. உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே - வண்டுமலர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கை விரும்புஞ் செழிம்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி.

25. கல்லா அறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நண்ணாரே - வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள்.

26. உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் - மடவரால்
கண்ணை ாவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு.

27. கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர் - அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியதாம் மென்று.

28. முனிவினும் நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனிவினும் நல்கார் கயவர் - நனிவிளைவில்
காயினு மாகும் கதலிதா னெட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை.

29. உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடக்கும் ஒருகோடி யாக - நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியாய் அஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான்.

30. கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன் முன்
உள்ளங் கனிந்தறஞ் செய்துய்கவே - வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு.

31. பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவர் - நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது.

32. பன்னும் பனுவற் பயன்றே றறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே - நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குரியவர்
விள்ளா அறிஞரது வேண்டாரே - தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல்.

34. அறிவுடையா ரன்றி அதுபெறார் தம்பாற்
செறிபழியை அஞ்சார் சிறிதும் - பிறைநுதால்
வண்ணஞ் செய்வாள் விழியே அன்றிமறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோஈருளைக் கண்டு.

35. கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றயர்தாம் என்றும் மதியாரே - வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள் விழியாய்! வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம்.

36. தக்கார்க்கே ஈவர் தகார்க்கிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர் - எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்.

37. பெரியார்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழும் - தெரியாய்கொல்
பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய்! விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து.

38. நல்லார் செய்யுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செய்யுங்கேண்மை யாகாதே - நல்லாய்கேள்
காய்முற்றின் தின்தீன் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம்.

39. கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
உற்றுழியுந் தீமை நிகழ்வுள்ளதே - பொற்றொடீ!
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
அன்றே மணமுடைய தாம்.

40. பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார் -மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்



## காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையும் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரிகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் செளவும்
உய்யொளி செளவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் செளவும் கிளரொளியையும்
நிலைபெற்றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அடிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்கச்
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளக்கவேல் காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்ட குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்திற் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவால்ப் பேய்களும் குறளைப்பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத் துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனகபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தானெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதிங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படாதொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப்பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் மலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்த தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவஜம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரென்மர் செயலட ரருளுவர்
மாற்றவ ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை அதனால்
இருபத் தேழ்வர்க் உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்ன குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேவா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக் காப்பு



காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்மாள் தாயாளே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோல் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷா சுரனைக் கூறு போட்டவளே
அசுரர் குலம் யாவும் அழிக்கும் சுடர்க் கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர் விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ தோன்றி இருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ தோன்றி இருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ தோன்றி இருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனை அணைத்தே அருள்மாரி பொழிந்தாளே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியா த் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டி
காப்பைப் புனைந்துவிடு கால பயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விளைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெறுங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடன் பாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் பழங்கள் வெற்றிலைகள் பல வகைத் திரவியங்கள்
நானுனக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கும் வித்தவளே
விந்தை விதைப்பவளே வினை காக்கும் காப்பவளே
எந்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உனதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதில் மாற்றி விட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் முதலியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்ட தெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவிடும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் ஏலக்காப்பு கட்டதனில்
பூவும் நீறுமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவோம்
ஞானக் கொழுஞ் சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக்கண்டால் எரிபோல் கனன்றிடுவேன்
தீமை செயலேதும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற்கரிதான சோதிமிக்க தாய்தன்னை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்குவ மனதுடனே பரவிய னைவோர்க்கு
சித்தி எல்லாம் தருவாள் சீர்பெருகும் கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால முணர்வுண்டு
இச்சக்தி யுளோர்களெல்லாம் ஏற்றியெம்மைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி யெல்லாம் அருள்வாய் கௌரியம்பாள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவிட
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத் தீங்கினியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்க வென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய் பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகலகலா வல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலா வல்லியே.

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகலகலா வல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
நேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலா வல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகலகலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகலகலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள்
வாய் நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகலகலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகலகலா வல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகலகலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும்ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ ரெம்பாவாய்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப் பொருளை
கண்ணுக்கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீகடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச்சிவனே சிவனே என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
நானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குத் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறவாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலிதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்புவெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழிமுதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
என்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்னகுறையும் இனிமேலோ ரெம்பாவாய்

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகே ரென்னக்
கையாற் குடைந்தும் குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யா வெண்ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கன் மடந்தை மணவாளா
ஐயார் ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வாண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலராய் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால் தங்கள்
மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக் கொங்கைகள்
பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
போதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தணையாள் விண்ணோரைத் தாள்பணி
போரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்புத் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கணவன் பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாகக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனே
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங் கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சோற் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லாதான் தோள்சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி



போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந் தண்வயல் சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போய்
அகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழுவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரணிரை யறுபத முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருணிதி தரவரு மாநந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருவிக ளியம்பின வியம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நற்செழிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரியா யெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணை ரியாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையு மாண்டு கொண்டி ன்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

பூதங்கள் தோறு நின்றாயெனி னல்லாற்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லற்றாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங்கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலரு் தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரு மறியார்
இதுவவன் றிருவுரு இவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந்தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழழ் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோவிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாழ்வழி யடியோங்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்த மெய்க் கருணையு நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளவையார் அருளிச்செய்த

# விநாயகர் அகவல்



## காப்பு

அற்புதவி நாயகர்தம் ஆசிரியர் பாவுரையைச்
சொற்பொருளின் குற்றமின்றிச் சொல்லவே முற்படுசீர்ச்
சொற்பொருளெல் லாங்கடந்து தூய்தாம்மெய்ஞ் ஞானமிகு
கற்பகவி நாயகன்றான் காப்பு.

## நூல்

சீதக்களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ(கு) எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழு(து) என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்(து) அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒழுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் (து) அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழிமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக்(கு) அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் (கு) அருளி
என்னை அறிவித் (து) எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித் (து)
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தி என்செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீரும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே !

**விநாயகர் அகவல் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



தொல்லையிரும் பிறவிச் சூழுந்தலைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரர் எங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்ல
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்தும் மண்நிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இல்லாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆறா அமுதே அளவிலாப் பொம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவுக்கரச பெருமான் அருளிய

# திருவங்கமாலை

("செல்கதி காட்டிடப் போற்றும் திரு அங்கமாலை" எனச் சிறப்பிக்கப்பெற்றுள்ள இப்பத்திகத்தைப் படனம் செய்பவர் பிறவி எடுத்ததன் பயன்பெறுவர்)

1. தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

2. கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின்றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

3. செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான்றிற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ.

4. மூக்கை நீ முரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய்.

5. வாயே வாழ்த்து கண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பிரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய்.

6. நெஞ்சே நீ நினையர் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கைகாள் கூப்பித் தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.

8. ஆக்கை யாற்பயனென் - அரன்
கோவில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்
ஆக்கையாற் பயனென்.

9. கால்களாற் பயனென் - கறைக்
கண்ட னுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்
கால்களாற் பயனென்.

10. உற்றா ராருளரோ - உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றலாத்துறை கூந்தனல் லானமக்கு
உற்றா ராருளரோ.

11. இறுமாந் திருப்பன் கொலோ - ஈசன்
பல கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்தி தன் சேவடிக்கீழ்ச் சென்று
இறுமாந் திருப்பன் கொலோ.

12. தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்
தேடிக் கண்டுகொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பைய லென்ற போதே பரிந்து எடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் சுமந்து
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்றதாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்.

வட்டிலிலுந் தொட்டிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னை காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்.

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலேகொண் டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டு பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்லத் திரவியப்பூ
மானேயென அழைத்த வாய்க்கு.

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகம்மேல் முகம் வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு.

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென் இலங்கையிலே
அன்னையிட்ட தீ அடி வயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்க மூள்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதோ பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த் தெடுத்தகை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரங்கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய்.

வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருப்பாள்
நேற்று இருந்தாள் இன்று வெந்து நீறு ஆனாள் -பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கன் ஏது என்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

நெருப்பான மேவியர் செங்காட்டி லாத்தி நிழலருக்கே
இருப்பார் திருவுள மெப்படியோ வன்னு மன்னைக்
கருப்பா சயக்குழிக்கே தள்ளுமோ கண்ணன் காணரிய
திருப்பாத மேதகுமோ தெரியாது சிவன் செயலே.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடைசுற்றி
முத்தும் பவளமும் பூண்டு ஓடியாடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனிச்சாம் பிணங்கள்
குத்துங் கணக்கென்ன காண்க கயிலாயபுரிக் காளத்தியனே.

கையொன்று செய்ய விழியொன்று
நாடக் கருத்தொன்று எண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று
பேசப் புலால்கமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று
கேட்க விரும்பும் யான்
செய்கின்ற பூசை யெவ்வாறு கொள்
வாய்வினை தீர்த்தவனே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாடு

### சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

### சந்திரன்

எங்கள் குறைக ளெல்லாந் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

### செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு.

### புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
பதந்தந் தாள்வாய் பண்ணொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி.

### வியாழன்

குணமிகு வியாழக் குருபகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரக தோசமின்றிக் கடாஷித் தருள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளி

சுக்ர மூர்த்தி சுபமிக யீவாய்
வக்ர மின்றி வரமிகத் தருள்வாய்
வெள்ளிச் சுக்ர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே.

## சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபகவானே
மங்கலம் பொங்க மனம் வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா

## இராகு

அரவெனும் இராகு ஐயனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

## கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரஷி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபக் கிரிகையின் போது குருக்களிற்கு வழங்கப்பட வேண்டிய பொருட்கள்

**(திருமணத்தின் போது குருக்களிற்கு கொடுக்க வேண்டிய பொருள் விரபம் பின்வருமாறு)**

| | | | |
|---|---|---|---|
| 1) | மஞ்சள்மா | - | 1 பைக்கற் |
| 2) | பச்சை அரிசி | - | 2 படி |
| 3) | தேங்காய் | - | 6 + 3 |
| 4) | வெற்றிலை | - | 15 |
| 5) | பாக்கு | - | 15 |
| 6) | வாழைப்பழம் | - | 15 |
| 7) | தேசிப்பழம் | - | 1 |
| 8) | பட்டு (மஞ்சள்) | - | 1 |
| 9) | கற்பூரம் | - | 1 பைக்கற் |
| 10) | ஊதுபத்தி | - | 1 பைக்கற் |
| 11) | சாம்பிராணி | - | 1 பைக்கற் |
| 12) | சந்தனம் | - | 1 கட்டி |
| 13) | குங்குமம் | - | 15 கிராம் |
| 14) | நூற்பந்து | - | 1 |
| 15) | பால் | - | 1/4 போத்தல் |
| 16) | அறுகு | - | சிறிதளவு |
| 17) | இரண்டு தானத்திற்கு | - | அரிசி, காய்பிஞ்சு, தேங்காய் |
| 18) | குருசாப்பாட்டரிசி காய்பிஞ்சு, தேங்காய் | | |
| 19) | பூமாலை | - | 1 (பெண் வீட்டார்) |
| 20) | பூமாலை | - | 1 (ஆண் வீட்டார்) |
| 21) | சில்லறைக்காசு | | |
| 22) | ஒரு ரூபாய் குத்தி | | |
| 23) | கோயில் கட்டணம் | | |
| 24) | குரு தட்சணை | | |
| 25) | உதவியாளர் தட்சணை | | |

மேலே உள்ள பொருட்களை நேரத்தோடு குருக்கள் வீட்டிற்கு அனுப்ப வேண்டும்.

மேளம் , சால்வை , கற்கண்டு , மணவறை , பசுக்கன்று கம்பளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முந்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைமின்
சத்தியுஞ் சோமியும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கெளரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமின்னெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பக நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே

காசணி மின்க ளாலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

உலக்கைபல வோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்துநாமே.

சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர்குழா மெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமுமவர் தம்மை யார்ப்பவார்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடி
செம்பொ னுலக்கை வலக்கைபற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாட
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாவாட
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவளந் துடிப்ப
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமைய னெம்மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித முந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு உய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்க னெயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே.

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடி
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடு மரவம்பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்துநாமே.

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



**நமஸ்காரம்!**

எமது குடும்பத்தின் தலைவனாய் விளங்கிப் பிரகாசித்த மாண்புமிகு பண்பு நிறை அன்புத் தெய்வம் அமரர்.குமாரு - கிருஷ்ணபிள்ளை இறைபதம் எய்திய செய்தியின் போது உடனிருந்தும் விரைந்து வந்தும் பல்வேறு வகையிலும் உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அயலவர்கள் யாவர்க்கும், சுகவீன முற்றிருந்த வேளை வந்து பார்த்து ஆறுதல் கூறியோருக்கும், அவசர சிகிச்சையை உடனளித்த மந்திகை ஆதார வைத்தியசாலை, யாழ் போதனா வைத்தியசாலை, வைத்தியர்கள், ஊழியர்களுக்கும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பத்திரிகை, பக்ஸ், தொலைபேசி போன்றவை மூலமும் தமது துக்கங்களைப் பகிர்ந்து கொண்டோருக்கும், அனைத்து கிரியைகளிலும், அந்தியேட்டி வைபவத்திலும் , மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டோருக்கும், கிரியைகள் செய்த குருமாருக்கும் பிரார்த்தனையில் ஈடுபட்டோருக்கும், இம்மலரினை ஆக்க உதவி செய்த **S.P.M** அச்சகத்தாருக்கும், மற்றும் இந்நிகழ்விற்கு உதவிய யாவர்க்கும் எமது இதயம் கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். நன்றிகள் பல.

**வணக்கம்.**


தம்சிட்டி,
பருத்தித்துறை.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றவருடயதாகிறது,
மற்றொருநாள்
அதுவே வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நீதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



S.P.M பிரின்ரேர்ஸ், வி.எம். ரோட், பருத்தித்துறை. T.P.No: 0774966997

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org